செ.வெ.எண்.03 நாள்.03.07.2017

# செய்திகுறிப்பு

****

03.07.2017 திங்கட்கிழமை அன்று திருநெல்வேலி ஏ.ஏ.ஆர் ராயல் பார்க் **ஹோட்டலில்** காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை **தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால்** சிறப்பு தொழில் கடன் விழா கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கிற்கு வந்திருந்தோரை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர் (பொ)திருநெல்வேலி வரவேற்றார்.

கருத்தரங்கினை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து தலைமையுரையாற்றினார். அவர் தமது உரையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் திருநெல்வேலி மாவட்டத்தில் விரைவான தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தி அதன் மூலம் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்கியும் அதன் வாயிலாக மாவட்ட பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்த முயற்சி மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார். மேலும் முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் புதிய தொழில்களை தொடங்க கேட்டுக்கொண்டு அதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகம் கடன் நிதியுதவி செய்யும் என கூறினார்.

மேலும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழக பொது மேலாளர் (திட்டம்) திரு கிருபாகரன் திட்ட விளக்கவுரையாற்றினார். விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 3 பயனாளிகளுக்கு ரூ.78.73 லட்சம் கடனுதவிக்கான ஆணைகளை வழங்கினார்கள். விழாவில் திரு ஞானசேகர் பொதுமேலாளர் மாவட்ட தொழில் மையம் திரு அனந்த சேகர் தலைவர் நெல்சியா திரு பால்துரை தலைவர் திருநெல்வேலி மாவட்ட அரிசி ஆலை மற்றும் நெல்/அரிசி வியாபாரிகள் சங்கம் மற்றும் திரு அன்பழகன் தலைவர் கீழப்பாவூர் வட்டார நவீன அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கம் கருத்தரங்கில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். அத்துடன் திரு சுரேஷ்குமார் தணிக்கையாளர் பொருள் மற்றும் சேவை வரி குறித்து விளக்கமளித்தார்.

இறுதியாக திரு க. முருகேசன் கிளை மேலாளர் திருநெல்வேலி நன்றியுரை வழங்கினார்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**